சார்பு நீதிமன்றம், விருதுநகர்

M.C.O.P.No: 91/2020 Date: 14.03.2024

எதிர்மனுதாரரின் தரப்பு சாட்சி–1(Rw1) வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144வது பிரிவின்படி திருமதி.சேர்மக்கனி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : விக்ரம் | சாதி | : | |
| த/பெ | : கருப்பசாமி | சமயம் | : | |
| கிராமம் | : மருதுபாண்டியமடம் | தொழில் | : | |
| தாலுகா | : சிவகாசி | வயது | : | 33 |

முதல் விசாரணை –

நான் தற்போது பட்டாசு ஆலையில் வேலை பார்த்து வருகிறேன். இதற்கு முன்பு ஆக்டிங் டிரைவராக வேலை பார்த்து வந்தேன். இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் கடந்த 11.10.2019ம் தேதி மதுரையில் இருந்து சிவகாசிக்கு டாடா இண்டிகா TN67 AB 2452 என்ற வாகனத்தை ஓட்டி வந்தேன். அன்று இரவு 10.00 மணியளவில் V.V.V.N.C மருத்துவமனை அருகே வந்த போது எதிரே ஒரு இருசக்கர வாகனத்தில் ஒரு நபர் ஓட்டி வந்தார். ஒரு நபர் ரோட்டின் வலதுபுறம் ஏறிவந்து எனது வாகனத்தின் வலது பக்கத்தில் மோதி விட்டார். நான் வந்த சாலையானது நான்குவழிசாலையின் பிரதான சாலையாகும். அந்த சாலையில் வடக்கிலிருந்து தெற்கே செல்லக்கூடிய வாகனங்கள் மட்டுமே செல்லமுடியும். தெற்கில் இருந்து வடக்காக செல்லும் வாகனங்கள் அனைத்தும் மேற்கே உள்ள பிரதான சாலையில் தான் செல்ல வேண்டும்.

எனக்கு எதிரே இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் செல்ல வேண்டும் என்றால் எனக்கு அடுத்தாற் வலதுபுறமாக உள்ள பிரதான சாலை அல்லது சர்வீஸ் ரோடு வழியாக தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். மேற்படி அந்த நபர் கிழக்கு பக்கம் உள்ள சாலை வழியாக தவறான பாதையில் வந்த காரணத்தினால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரே இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் தீடீரென்று எதிரே வாகனத்தை ஓட்டி வந்ததால் விபத்து ஏற்பட்டது. விபத்து சம்மந்தமாக போலிசாரிடம் நான் தான் புகார் கொடுத்தேன். விபத்து சம்மந்தமாக இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் சென்ற காரை மிதான வேகத்தில் தான் ஓட்டி சென்றேன். இந்த விபத்திற்கு காரணம் முழுக்கமுழுக்க எதிர் திசையில்இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம். எனது ஓட்டுநர் உரிமம் **எ.ம.சா.ஆ.1**(அசலுடன் ஒப்பிடப்பட்டது). சம்பவத்தன்று இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் தலைகவசம் அணியவில்லை.

<u>**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

சம்பவ இடத்தில் இரண்டு பிரதான சாலை உள்ளது. ஒன்று மதுரையில் இருந்து விருதுநகர், மற்றொன்று விருதுநகரில் இருந்து மதுரைக்கு செல்லக்கூடிய பிரதான சாலையாகும். சம்பவ இடத்திற்கு சற்று தெற்கே கிழக்கே உள்ள சர்வீஸ் ரோட்டிற்கும், மேற்கே உள்ள சர்வீஸ் ரோட்டிற்கும் செல்வதற்கு இடைவெளி விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவத்தன்று மேற்கே உள்ள பிரதான சாலை பேரிகார்டுகளால் அடைக்கப்பட்டு கிழக்கே உள்ள பிரதான சாலை வழியாக வாகனங்கள் திருப்பி விடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அன்றைய தினத்தில்

அரசியல் பிரமுகர்கள் பயணியர் விடுதிக்கு அதிக அளவில் வந்ததால் மேற்கே உள்ள பிரதான சாலை அடைக்கப்பட்டு, கிழக்கே உள்ள சாலை வழியாக போக்குவரத்து விடப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்து காவல்நிலையம் 4 கிமீ தூரம் இருக்கும். சம்பவ இடத்திற்கு வந்த போலிசார் என்னை காவல்நிலையம் அழைத்து சென்றார்கள். நான் அங்கு நடந்ததை சொன்னேன். போலிசார் எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் மட்டும் வாங்கினார். நான் அதை வாசித்து பார்க்கவில்லை. நான் போலிசாரிடம் அடிப்பட்ட நபரின் பெயர், விலாசம் எதுவும் சொல்லவில்லை. அந்த சமயத்தில் மேற்படி நபரின் பெயர், விலாசம் தெரியாது. போலிசாராக புகாரில் மேற்படி நபரின் பெயர், விலாசம் எழுதிக்கொண்டார்களா என்று எனக்கு தெரியாது. மேற்படி விபத்திற்கு நான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வலதுபுறம் ஏறி வந்து டாடா இண்டிகா வாகனத்தை ஓட்டி வந்து இருசக்கர வாகனத்தில் மோதி, இருசக்கர வாகனத்தில் வந்த நபரின் வலதுகால் துண்டிக்கப்பட்டு துண்டிக்கப்பட்ட கால் என் வாகனத்தில் இழுத்து சென்று விட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. அன்றைய தினம் மனுதாரர் ஒருவழி சாலையாக இருந்ததால் தான் கிழக்கு பக்கம் உள்ள பிரதான சாலை வழியாக செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் வடக்கு இருந்து வந்ததால், ஒருவழிசாலையாக்கப்பட்ட விபரம் தெரியாமல் வலதுபுறம் ஏறிவந்து விபத்து ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. மேற்படி புகார் கொடுத்த பிறகு அந்த புகார் என்னானது என்று தெரியாது. நான் மித வேகத்தில் வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்

சரியல்ல. இருசக்கர வாகனத்தில் வந்தவர் தலைகவசம் அணிந்து சாலைவிதிகளை பின்பற்றி வாகனத்தை ஓட்டிவந்தார் என்றும், நான் தான் கவனக்குறைவாக ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. மேற்படி நபர் தலைகவசம் அணிந்து வந்தாரா என்ற விபரத்தை புகாரில் சொல்லியுள்ளேனா என்று எனக்கு ஞாபகமில்லை. நான் புகாரில் சொல்லாத சங்கதிகளை தற்போது புதியதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் தவறான பாதையில் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல.